தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 073/ந/2021
நாள். 29.12.2021

திருமதி. S.ரேவதி,
போடி நாயக்கனூர். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
போடி நாயக்கனூர். – எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி, 13வது வார்டு, நகராட்சி காலனி, எண்.76 என்கின்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S.ரேவதி என்பவரின் 02.08.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.08.2021 அன்று பெறப்பட்டு, 073/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி, 13வது வார்டு, நகராட்சி காலனி, எண்.76 என்கின்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S.ரேவதி தனது 02.08.2021 நாளிட்ட மனுவில் போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகளில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாக பொது கழிப்பிடத்தை 2018-ம் ஆண்டில் பொது ஏலம் விட்டதில் வார்டு எண்.9 நகராட்சி பேட்டை தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாக பொது கழிப்பிடத்தை ரூ.21,500/-க்கு ஏலத்தொகை கேட்ட சிவா/சின்னாத்தேவர் வரியுடன் சேர்த்து ரூ.26,875/- தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தி கழிப்பிடத்திற்கு உரிமம் ஏதும் பெறாமல் சம்பந்தப்பட்ட ஆணையாளர், மேலாளர், இளநிலை உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர் ஆகியோருக்கு லஞ்சம் கொடுத்து சிவா/சின்னாத்தேவர் தான் கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்ய உரிமம் பெற்றதாக பொய்

சொல்லி ஒப்பந்த விதிமுறைகளுக்கு மாறாக அதிக லாபத்திற்கு அம்மாவாசி என்பவருக்கு குத்தகைக்குவிட்டுள்ளார். அவர் பொது மக்களிடம் அதிக கட்டணமாக மலம் கழிக்க 3 ரூபாயும் சிறுநீர் கழிக்க 2 ரூபாயும் வசூல் செய்துள்ளார்.

இவர்கள் மீது லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து நகராட்சிக்கு வரவேண்டிய பணத்தை கையகப்படுத்தி நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யும்படி இம்முறைமன்றத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர், போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 07.12.2021 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்றத்தில் 02.12.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டன. மனுதாரர் மேற்கண்ட 07.12.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் தேனி மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு, அவர் சார்பாக போடிநாயக்கனூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு.ம.சுகதேவ் என்பவர் ஆஜரானார்.

இம்முறைமன்றத்தில் 07.12.2021 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்துகொண்ட நகரமைப்பு ஆய்வாளர் திரு.ம.சுகதேவ் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார் :-

போடிநாயக்கனூர் நகராட்சியில் அமைந்துள்ள வார்டுகளில் மொத்தம் 27 ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் அமைந்துள்ளன. சுய உதவி குழுவினரால் பராமரித்து வந்த ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் மற்றும் பொதுக் கழிப்பிடங்கள் அவர்களால் சரிவர பராமரிக்கப்படுவதில்லை என பொது மக்களிடமிருந்து புகார்கள் வரப்பெற்றதால், மேற்கண்ட பொது கழிப்பிடங்களை தனியார் மூலம் பராமரிக்க ஏலம் விடப்பட்டது. இதற்காக 28.02.2018 நாளிட்ட மன்றத் தீர்மானத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஏலம் விடப்பட்டது. மேற்கண்ட கழிப்பிடங்களை ஏல முறையில் விடுவது குறித்து போடிநாயக்கனூர் நகராட்சியைச் சேர்ந்த இரண்டு சுய உதவி குழுக்கள் பல்வேறு எதிர்ப்புகள் எழுந்ததால், மேற்கண்ட ஏலம் ரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட ஏலம் ரத்து செய்யப்பட்டவுடன், 6 கழிப்பிடங்களை ஏலம் எடுத்த நபர்கள் திரு.சிவா, திரு.வினோத் போன்ற நான்கு பேரால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் 27கழிப்பிடங்களில், 6ஐ தவிர்த்து, மீதமுள்ள 21 கழிப்பிடங்களும் மகளிர் சுய உதவி குழுவினரே தற்போது வரை பராமரித்து வருகின்றனர்.

மேற்கண்ட 21 கழிப்பிடங்களில் ஒன்றான வார்டு எண்.9 நகராட்சி பேட்டை தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாக பொதுக் கழிப்பிடத்தையும் சுய உதவி குழுவினரே பராமரித்து வருகின்றனர் என்கின்ற விவரத்தையும் மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்தவாறு அம்மாவாசி என்பவர் மேற்கண்ட பேட்டை தெருவில் உள்ள கழிப்பிடத்தை உபகுத்தகைக்கு (Sub-lease) விடவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தின் முன் தெரிவித்து, இது தொடர்பாக நகராட்சி ஆணையரின் 07.12.2021 நாளிட்ட அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

3. நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார் :-

During 2005, 27 Community Toilets were built for the welfare of the people with a motive to be maintained by the people themselves by collecting nominal fees from the public. But the Toilets will be maintained and controlled by the municipality only. Hence, the municipality with an intension to help self help group ladies, let the 27 toilets to 27 self help groups in the respective community areas.

During 2010, the then Commissioner, with an intension to help the sanitary workers family members he formed two groups (Viz Sugamathi & Amuthasurabi) and let all the 27 Toilets under their control with a condition to submit the income and expenditure statements every month before the municipality. Till then they are collecting fees and but not maintaining the toilets property. They also did not submitted any records before the municipality till now. They were also many politics among themselves and not of complaints arose from the public also. Hence in 2018, the commissioner let the toilets under tender. But when he realized that it was not as per procedure, he immediately cancelled the tender and also withdrawn the ownership from the lessees. The six lessees filed W.P. in the High Court. So Six Toilets were in their possession from 2018. In 2021, Judgement was given that as the three years period ends, the municipality can take decision to let it to self help groups. So the municipality handed over the six toilets to the said two groups, in the meantime the lessees again got stay order and hence the municipality cancelled the order of self help groups and retained the position.

In the meantime, both the parties (Two groups and the lessees) created lot of law and order problems and created the bad name to the municipality by projecting the commissioner as corrupt even though they know the situation well as per the court order only the municipality acted.

The municipality filed a counter affidavit for stay vacate petition and against the case of both the parties. Both the parties till now creating lot of problems to the municipality considering let out toilets are their property and not even submitted any records before the municipality. So the municipality decided to let the toilets to the genuine self help groups in the same locality so as to avoid complications to the municipality and to the public.

4. போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் 14.12.2021 அன்று நடைபெற்ற இம்முறைமன்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு 9 பேட்டை தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாக பொதுக் கழிப்பிடத்தை சிவா என்பவர் குத்தகைக்கு எடுத்து அம்மாவாசி என்கின்ற நபரை சம்பளத்திற்கு அமர்த்தி நடத்தி வருகிறார். மேற்கண்ட மனுதாரர் திருமதி

ரேவதி மற்றும் சுப்பிரமணி ஆகியோர் இரண்டு குழுக்களாக செயல்பட்டு, நகராட்சியின் 27 சுகாதார வளாக பொதுக் கழிப்பிடங்களை பராமரித்து வருகின்றனர். குத்தகைதாரர்கள் மற்றும் மேற்கண்ட ரேவதி என்பவர் பராமரித்து வரும் கழிப்பிடங்கள் தொடர்பாக இரு குழுக்களிடைய பிரச்சனை ஏற்பட்டு குத்தகைதாரர் பராமரிக்க வேண்டிய கழிப்பிடத்தை ரேவதி என்பவர் தானே பராமரித்து வருவதால், திருமதி ரேவதி பராமரிக்க வேண்டிய கழிப்பிடத்தை மேற்கண்ட சிவா என்பவர் பணிக்கு ஆளை வைத்து நடத்தி வருகிறார். பொதுமக்களுக்கு இடைஞ்சல்களுடனும், தங்களது லாப நோக்குடனும் செயல்பட்டு, மேற்கண்ட பொது கழிப்பிடங்களை பராமரித்து வரும் இரு குழுக்களாலும் அங்கு சட்டம் ஒழுங்கு பிரச்சனை அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட அங்கீகாரம் பெறாத இரு குழுக்களுக்கும் மேற்கண்ட 27 கழிப்பிடங்களை பராமரிக்க தராமல், பொது மக்களுக்கு எவ்வித பிரச்சனையுமின்றி மேற்கண்ட கழிப்பிடங்களை பராமரிக்க அந்தந்த கழிப்பிடங்கள் உள்ள பகுதியில் இயங்கிவரும் சுய உதவி குழுக்களின் மூலம் பராமரித்திட நகராட்சியால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான எனது 10.12.2021 நாளிட்ட அறிக்கையினை இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட நகராட்சி ஆணையரின் 10.12.2021 நாளிட்ட கடிதத்தில் ஆணையர் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:-

போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குப்பட்ட 33 வார்டுகளில் ஐ.எஸ்.பி கழிப்பிடங்கள்–4, பாம்பே கழிப்பிடங்கள்–8, பொதுக்கழிப்பிடங்கள்–15 ஆகிய மொத்தம் 27 கழிப்பிடங்களை நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு மேற்பார்வையாளர்களை வைத்து பராமரித்து வந்த நிலையில், நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கும் நோக்குடன் இரண்டு குழுக்களாக நியமித்து மேற்காணும் கழிப்பிடங்களை பராமரித்து வர உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

பொதுகழிப்பிடங்கள் மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களை பராமரித்து வந்த இருகுழுக்களான சுகமதி மற்றும் அமுதசுரபி குழுக்கள் முறையாக செயல்படாமலும், தன்னிச்சையாக செயல்பட்டதாலும், சரிவர பராமரிக்காமல் இருந்து வந்தது நகராட்சி நிர்வாகத்தின் கவனத்திற்கு வந்த காரணத்தினால் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியுடன் குத்தகைக்கு சுகாதார வளாகங்களை பராமரிக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஏற்கனவே பராமரித்து வந்த இரு குழுக்களுக்கு போடிநாயக்கனூர் நகராட்சியில் 13.09.2017 ம் நாளிட்ட அறிவிப்பு கடிதத்தில் கழிப்பிடங்களை பூட்டி சாவியினை நகராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் ஒப்படைப்பு செய்யாத காரணத்தினால் பொதுமக்களின் அன்றாட தேவைகளில் ஒன்றான கழிப்பிட வசதியின் தேவையினை கருத்திற்கொண்டும். பொதுமக்களின் நலன்கருதியும் ஏல நடைமுறைகளை முடித்து குத்தகைதாரர்களுக்கு ஒப்படைப்பு செய்யும் வரை குழுக்களே பராமரித்து வர வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டது.

பின்னர் நகர்மன்ற தீர்மான எண்–1, நாள்.24.01.2018 ன்படி மேற்படி கழிப்பிடங்களுக்கு பொறுப்புத்தொகை நிர்ணயம் செய்து 20.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் கோரப்பட்டது. அவற்றில் உயர்ந்த பட்ச ஏலம் கோரிய ஒப்பந்தகாரர்களுக்கு உரிமம் வழங்கி ஆணைபிறப்பிக்கப்பட்டு, அவர்களுக்கு உரிமம் இனம் ஒதுக்கீடு செய்ய இருந்த நிலையில் இதற்கு முன் கழிப்பிடங்களை பராமரித்து வந்த இரண்டு மகளிர் குழுக்களும் மேற்படி

ஏலத்தினை இரத்து செய்து தங்களுக்கே கழிப்பிடங்களை ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என மனு அளித்துள்ளனர்.

இம்மனுவினை பரிசீலனை செய்ததில் மேற்படி இருகுழுக்கள் முறையாக செயல்படாததால், பொது ஏலம் மற்றும் ஒப்பந்த விதிகளின்படி குழுக்கள் மூலம் பராமரிக்க ஒதுக்கீடு செய்ய இயலாது எனவும், குழு உறுப்பினர்கள் தனிநபராக 20.02.2018 அன்று நடைபெறும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள எவ்வித ஆட்சேபனை இல்லையென அறிவிப்பின் மூலம் இரண்டு குழுக்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு குழு உறுப்பினர்கள் தனி நபராக 20.02.2018 தேதிய பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

இந்நிலையில் பொது ஏலம் முடிந்து ஏலத்தின் மூலம் கழிப்பிடங்களை எடுத்த குத்தகைதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் தருவாயில் கழிப்பிடங்களை பராமரித்து வந்த இரண்டு குழுக்களும், குத்தகைதாரர்களும் அவரவர்கள் கழிப்பிடங்களை தங்களுக்கே ஒதுக்கீடு செய்ய வேண்டும் என கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனை தவிர்க்கும் பொருட்டு சட்டம்–ஒழுங்கு பிரச்சனை எழாமல் இருக்கவும் , பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படா வண்ணம் பயன்பாட்டிற்கு கொண்டுவரவும் 22.03.2018-ல் வழங்கிய செயல்முறை ஆணையை 27.04.2018 ல் ரத்து செய்து செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டது. பின்னர் இரு குழுக்களும் நல்ல முறையில் கழிப்பிடங்களை பராமரிப்போம் என 08.05.2018-ல் உறுதி மொழி பத்திரம் வழங்கிய நிலையில் 09.05.2015-ல் 27 கழிப்பிடங்களை பராமரிக்க இரு குழுவிற்கும் நிபந்தனையுடன் கூடிய நகராட்சியின் செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டது.

குழுவிற்கு செயல்முறை உத்தரவு வழங்கிய பின்னர் குத்தகைக்கு கழிப்பிடங்களை எடுத்த குத்தகைதாரர்களில் கீழ்காணும் விபரப்படியாக உள்ள கழிப்பிடங்களுக்கு குத்தகைதாரர்களே பராமரித்து வர சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தடையாணை பெற்றுள்ளார்கள்

| வ எண் | குத்தகைதாரர் பெயர் | கழிப்பிட விபரம் | தடையாணை எண் |
|---|---|---|---|
| 1 | தீபக்குமார் | வார்டு எண்.27, சுப்பிரமணியசாமி கோவில் வடக்கு தெருவில் அமைந்த ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | WP (MD) No.12129 / 2018 and WMP (MD) No.11049 / 2018 Dated. 07.6.2018 |
| 2 | எம். வினோத் | வார்டு எண்.10, எஸ்.எஸ்.புரம் சாலையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | WP (MD) No.12130 / 2018 and WMP (MD) No.11050 / 2018 Dated. 07.6.2018 |
| 3 | சி .சிவா | 1. வார்டு எண்.2 வடக்குரத வீதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | WP (MD) No.12202/ 2018 and WMP (MD) No.11100 / 2018 Dated. 08.6.2018 |

| | | | |
|---|---|---|---|
| | | 2.வார்டு எண்.7 கிழக்கு வெளி வீதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம்<br><br>3.வார்டு எண்.23 மருதுபாண்டியர் தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் | |
| 4 | கே.அன்பழகன் | வார்டு எண்–27 வெள்ளையப்பன் தெருவில் அமைந்துள்ள சுகாதார வளாகம் | WP (MD) No.12668 / 2018 and<br><br>WMP (MD) No.11549 / 2018 Dated. 14.06.2018 |

சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையின் 08.06.2018 ம் தேதிய நீதிமன்ற ஆணையின்படி வார்டு எண்–2 வடக்கு ரத வீதி சுகாதார வளாகத்தினைகுழுவிற்கு வழங்கப்பட்ட 09.05.2018 ம் செயல்முறை உத்தரவினை ரத்து செய்து குத்தகைதாரரான திரு.சி.சிவா அவர்களுக்கு ஒப்படைக்க செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட உத்தரவினை அடுத்து குத்தகைதாரருக்கு மேற்காணும் வார்டு எண்–2 வடக்கு ரத வீதி சுகாதார வளாகத்தினை ஒப்படைக்க சென்றபோது குழு உறுப்பனர்கள் ஒப்படைக்க மறுத்துவிட்டனர். இதனால் குழுவால் பராமரித்து வந்த வார்டு எண்–9, நகராட்சி பேட்டைத்தெருவில் உள்ள சுகாதார வளாகத்தினை குத்தகைதாரர் ஆக்கிரமித்து கொண்டனர்.

இந்நிலையில் சுகாதார வளாகங்களை மாற்றி கையகப்படுத்தி பராமரிக்கும் குழு உறுப்பினருக்கும், குத்தகைதரருக்கும் அவரவர் சுகாதார வளாகங்களை பராமரிக்க அறிவிப்பு வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018–2019 ம் நிதியாண்டு முடிவடையும் தருவாயில் உள்ளதாலும் , உயர்நீதி மன்ற தடையாணை நடைமுறையில் உள்ளதாலும் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் வாயிலாக வழக்குகளின் மனுதாரர்கள் வருமானம் ஈட்டி வருவதால் நகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படமால் தடுக்கும் பொருட்டு 2019–2020 ம் ஆண்டிற்கு முன்னெச்சரிக்கையாக 5 சதவீத உயர்வுடன் குத்தகை தொகையினை குத்தகைதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து திரு.சி.சிவா மற்றும் மூவர் 6 சுகாதார வளாகங்களை பெற தொடர்ந்த வழக்கில் தீர்ப்பாணை வழங்கியதை தொடர்ந்து. வழக்கில் உள்ள 6 சுகாதார வளாகங்களை 07.05.2021 ல் ஒப்படைக்க செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்காணும் 07.05.2021 ம் தேதிய செயல் முறையை உத்தரவினை ரத்து செய்யக்கோரிய குத்தகைதாரரின் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் வழக்கு எண். WP (MD) No.9533 of 2021 and WMP (MD) No.7273/ 2021 தீர்ப்பாணை நாள்.26.05.2021 ன்படி இவ்வலுவலக02.06.2021 ம் தேதிய செயல்முறை உத்தரவில் 07.05.2021 ம் தேதியில் குழுவிற்கு வழங்கிய செயல்முறை உத்தரவினை ரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது வார்டு எண்–9, நகராட்சி பேட்டைத்தெரு சுகாதார வளாகத்தினை பராமரித்து வரும் குத்தகைதாரர், வார்டு எண்–2, வடக்கு ரத வீதி சுகாதார வளாகத்தினை பராமரிக்கும் குழு ஒப்படைத்தால்

தானும் ஒப்படைப்பதாக தெரிவித்து 10.12.2021 ல் கடிதம் வழங்கியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

6. முறையீட்டு மனுதாரர் திருமதி.எஸ்.ரேவதி என்பவருக்கு பிரிதொரு வாய்ப்பு அளித்து, அவர் 21.12.2021 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வரும் வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

போடிநாயக்கனூர் நகராட்சியில் அமுதசுரபி மகளிர் சுய உதவிக்குழு மற்றும் சுகமதி மகளிர் சுய உதவிக் குழு என்கின்ற இரண்டு சுய உதவிக் குழுக்களைக் கொண்டு, போடிநாயக்கனூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த சுகாதார வளாக பொதுக் கழிப்பிடங்களை பராமரித்து வருகிறோம்.

போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண் 9 நகராட்சி பேட்டைத் தெருவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகதார வளாக பொதுக் கழிப்பிடம் உட்பட 27 கழிப்பிடங்களுக்கு ஏலம் நடைபெற்றது. மேற்கண்ட ஏலம் நடைபெற்று, பணி உத்திரவு வழங்கிய நிலையில் ஏலமானது நிர்வாகக் காரணங்களால் ரத்து செய்யப்பட்டது. மேற்கண்ட ஏலத்தில் கலந்துக்கொண்ட ஏலதாரர் திரு. சிவா என்பவர், ஏலத் தொகையை நகராட்சிக்கு கட்டாமலேயே அவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்கண்ட சிவா என்பவர், ஏலம் ரத்து செய்யப்பட்டதால், ஏலத் தொகையை கட்டாத நிலையில் திரு. அம்மாசி என்பவருக்கு சட்டவிரோதமாக மேற்கண்ட வார்டு எண் 9ல் உள்ள சுகாதார வளாக கழிப்பிடத்தை உப குத்தகைக்கு விட்டு பணம் சம்பாதித்து வருகிறார்.

எங்களது சுகமதி மகளிர் சுய உதவிக் குழுவால் பராமரிக்க ஒதுக்கப்பட்ட மேற்கண்ட வார்டு எண் 9–ல் அமைந்துள்ள சுகாதார வளாகக் கழிப்பிடத்தை நாங்கள் பராமரிக்க சென்றபோது மேற்கண்ட திரு. சிவா மற்றும் அம்மாவாசி ஆகியோர் அதனை எங்களிடம் அளிக்காமல் எங்களிடம் சண்டையிட்டு வருகின்றனர். இது தொடர்பாக காவல் துறை, மாவட்ட ஆட்சியர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு புகார் அளித்தும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டவில்லை.

மிகவும் நலிவடைந்த குடும்பத்தை சேர்ந்த எங்களது மகளிர் குழுவினருக்கு உதவும் பொருட்டு மேற்கண்ட வார்டு எண் 9–ல் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சுகதார வளாக பொதுக் கழிப்பிடத்தை எங்களது மகளிர் சுய உதவிக் குழுவே பராமரித்திட உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டிக்கொண்டார்.

7. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விபரங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கும் நோக்குடன் இரண்டு குழுக்களாக நியமித்து மேற்காணும் கழிப்பிடங்களை பராமரித்து வர உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

- பொது கழிப்பிடங்களை சரிவர பராமரிக்காமல் இருந்து வந்ததால் பொது ஏலம் மற்றும் ஒப்பந்த விதிகளின்படி குழுக்கள் மூலம் பராமரிக்க ஒதுக்கீடு செய்ய இயலாது எனவும், குழு உறுப்பினர்கள் தனிநபராக 20.02.2018 அன்று நடைபெறும் பொது ஏலத்தில் கலந்து கொள்ள எவ்வித ஆட்சேபனை இல்லையென அறிவிப்பின் மூலம் இரண்டு குழுக்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. அறிவிப்பில் தெரிவித்துள்ளவாறு குழு உறுப்பினர்கள் தனி நபராக 20.02.2018-ம் தேதிய பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

- குத்தகைக்கு கழிப்பிடங்களை ஏலம் எடுத்த குத்தகைதாரர்கள் நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். ஆணையின்படி வார்டு எண்–2 வடக்கு ரத வீதி சுகாதார வளாகத்தினைகுழுவிற்கு வழங்கப்பட்ட 09.05.2018 ம் செயல்முறை உத்தரவினை ரத்து செய்து குத்தகைதாரரான திரு.சி.சிவா அவர்களுக்கு ஒப்படைக்க செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட உத்தரவினை அடுத்து குத்தகைதாரருக்கு மேற்காணும் வார்டு எண்–2 வடக்கு ரத வீதி சுகாதார வளாகத்தினை ஒப்படைக்க சென்றபோது குழு உறுப்பனர்கள் ஒப்படைக்க மறுத்துவிட்டனர். இதனால் குழுவால் பராமரித்து வந்த வார்டு எண்–9, நகராட்சி பேட்டைத்தெருவில் உள்ள சுகாதார வளாகத்தினை குத்தகைதாரர் ஆக்கிரமித்து கொண்டனர்.

- சுகாதார வளாகங்களை மாற்றி கையகப்படுத்தி பராமரிக்கும் குழு உறுப்பினருக்கும், குத்தகைதாரருக்கும் அவரவர் சுகாதார வளாகங்களை பராமரிக்க அறிவிப்பு வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- திரு.சி.சிவா மற்றும் மூவர் 6 சுகாதார வளாகங்களை பெற தொடர்ந்த வழக்கு தீர்ப்பாணை வழங்கியதை தொடர்ந்து வழக்கில் உள்ள 6 சுகாதார வளாகங்களை 07.05.2021 ல் ஒப்படைக்க செயல்முறை உத்தரவு வழங்கப்பட்டது.

- தற்போது வார்டு எண்–9, நகராட்சி பேட்டைத்தெரு சுகாதார வளாகத்தினை பராமரித்து வரும் குத்தகைதாரர், வார்டு எண்–2, வடக்கு ரத வீதி சுகாதார வளாகத்தினை பராமரிக்கும் குழு ஒப்படைத்தால் தானும் ஒப்படைப்பதாக தெரிவித்து 10.12.2021 ல் கடிதம் வழங்கியுள்ளார்.

மேற்கண்ட சூழ்நிலையில் சுகமதி மகளிர் சுய உதவி குழுவால் பராமரிக்க ஒதுக்கப்பட்ட வார்டு எண்.9ல் உள்ள சுகாதார கழிப்பிடத்தை தாங்கள் பராமரிக்க சென்ற போது திரு.சிவா மற்றும் அம்மாவாசி ஆகியோர் அதை தங்களிடம் ஒப்படைக்காமல் சண்டையிட்டு வருவதாகவும் மேற்கண்ட வார்டு எண்.9ல் அமைந்துள்ள ஒருங்கினைந்த சுகாதார வளாக கழிப்பிடத்தை தங்களது மகளிர் சுய உதவிகுழுவே பராமரித்திட மனுதாரர் திருமதி.S.ரேவதி விரும்புகிறார். இந்நிலையில் இம்மனுவினை பரிசீலித்த இம்முறைமன்ற நடுவம் வார்டு எண்.9 நகராட்சி பேட்டை தெருவில் உள்ள சுகாதார வளாக பொதுக்கழிப்பிடத்தை மகளிர் சுய உதவிகுழு பெற்றிடவும் வார்டு எண். 2 வடக்குரத வீதியில் அமைந்துள்ள சுகாதார வளாக பொது கழிப்பிடத்தை குத்தகைதாரர் பெற்றிடவும் சட்டவிதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கையினை

மேற்கொள்ளுமாறு போடி நாயக்கனூர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சி தலைவரை அணுகி சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் என்று கருதினால் காவல்துறை உதவியை நாடும்படி கோர மனுதாரருக்கும் நகராட்சி ஆணையருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி.எஸ்.ரேவதி,
சுகமதி மகளிர் சுயஉதவிக்குழு,
13வது வார்டு, நகராட்சி காலனி,
போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்.

2) ஆணையாளர்,
போடிநாயக்கனூர் நகராட்சி,
போடிநாயக்கனூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.

Tamil Nadu State Local Bodies Ombudsman
GOVERNMENT OF TAMIL NADU